

**சிவன்மனை**

# இறைவணக்கம்

**ஹர ஹர நம பார்வதி பதயே**
ஹர ஹர மகாதேவா
**தென்னாடுடைய சிவனே போற்றி**
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
**ஏகம்பத்துறை எந்தாய் போற்றி**
பாகம் பெண்ணுறு ஆனாய் போற்றி
**அண்ணாமலை எம் மன்னா போற்றி**
கண்ணாறமுதக் கடலே போற்றி
**காவாய் கனக திரளே போற்றி**
கயிலை மலையானே போற்றிபோற்றி

**நந்தி தேவர் மலரடிகள்**
போற்றி போற்றி
**அருள்மிகு ஓம்காரேஸ்வரர் மலரடிகள்**
போற்றி போற்றி
**அருள்மிகு திரிபுரசுந்தரி மலரடிகள்**
போற்றி போற்றி
**நால்வர் மலரடிகள்**
போற்றி போற்றி
**63 நாயன்மார்கள் மலரடிகள்**
போற்றி போற்றி
**அகத்தியர் மலரடிகள்**
போற்றி போற்றி
**வெற்றிவேல் முருகனுக்கு**
அரோகரா
**திருச்சிற்றம்பலம்**
தில்லையம்பலம்

# வாழ்த்துப்பாடல்

வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க
மன்னன் கோன் முறை அரசு செய்க
குறைவு இலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

*****

## சிவன்மனை கைலாய வாத்தியக் குழு - வழிகாட்டுதல்கள்

### 1. வாத்தியங்களைக் கையாளும் முறை

**ஒதுக்கப்பட்ட வாத்தியங்கள்:** அன்பர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாத்தியங்களை மட்டுமே முறையாகக் கையாள வேண்டும்.
**பயிற்சி இல்லாத வாத்தியங்கள்:** முறையாகப் பயிற்சி பெறாத மற்ற வாத்தியங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

### 2. உடை மற்றும் தோற்றம்

**திருநீறு மற்றும் ருத்ராட்சம்:** குழுவினர் அனைவரும் திருநீறு தரித்து, ருத்ராட்சம் அணிந்திருக்க வேண்டும்.

**சிவ துண்டு:** சிவசிவ என அச்சிடப்பட்ட துண்டினை அணிந்திருப்பது அவசியம்.

**பொருத்தமான ஆடை:** கோவிலின் கண்ணியத்திற்கு உகந்த, கோவிலுக்கு உகந்த ஆடைகளை அணிந்து வர வேண்டும்.

## 3. கோவில் நெறிமுறைகள்

**இடத்தில் இருத்தல்:** வாத்தியம் வாசிக்க துவங்கும் பொழுது குழுவினரைத் தேடிக் கொண்டிருக்க முடியாது என்பதால், அனைத்து நேரங்களிலும் நமக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலேயே அமர்ந்திருக்க வேண்டும்.

**மௌனம் மற்றும் தியானம்:** வாத்தியம் வாசிக்காத நேரங்களில் உரையாடல்களை தவிர்த்து, சிவனை மனதிற்குள் நிறுத்தி தியானிக்க வேண்டும் அல்லது பாடுபவர்களுடன் சேர்ந்து பாடலாம்.

**மரியாதை அளித்தல்:** மற்ற சிவனடியார்கள் உங்களை சிவ பூத கணங்களாகவே பார்க்கிறார்கள்; அந்த நம்பிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் நமது செயல்கள்  இருக்கவேண்டும்.

**குழந்தைகளின் பாதுகாப்பு:** குழந்தைகளை ஓடி ஆடி விளையாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**பொருட்களின் பாதுகாப்பு:** உங்களிடம் விலை உயர்ந்த பொருட்கள் இருந்தால், அவற்றை நீங்களே பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## 4. உணவு மற்றும் தூய்மை

**பயன்படுத்திய பொருட்களைஅகற்றுதல்:** பிரசாதங்கள், குளிர்பானங்கள் அல்லது தண்ணீர் பாட்டில்களைப் பயன்படுத்திய பிறகு, அவற்றை முறையாக அப்புறப்படுத்திவிட்டு கோவிலை விட்டு வெளியேற வேண்டும்.

## 5. நிகழ்வின் நிறைவு

**வாழ்த்துப் பாடல்:** கைலாய வாத்திய நிகழ்ச்சியின் நிறைவில் வாழ்த்துப் பாடி முடிக்க வேண்டும்.

*****